RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s239

OPEN ACCESS

# தமிழ்நாட்டில் வைணவ சமயப் பரப்பலில் வியாச, வில்லிபாரதங்கள் பங்களிப்பு

**பி. சரண்யா** [அ, *]

[அ] ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021.

# The Role and Contribution of Vyasar and Villi Baratha's in the Vainava Religious propaganda in Tamil Nadu

**P. Saranya** [a, *]

[a] Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai 625021, Tamil Nadu, India

* Corresponding Author: paulyogaraj1411@gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

In Indian Culture, 'Baratham' take the prominent roles to make national integration and social, religious life culture. In Tamilnadu for the Vainava religious propaganda Vyasa, Villi Baratha's role and Contribution is inevitable. In this articles narrated the role and contribution of vyasar and villi Baratha is for the Vainava religious propaganda in Tamilnadu. The aim and objectives of this articles is to find out the role and contribution of Vyasar and Villi Baratha's in the vainava religious propaganda in Tamilnadu. In this articles mythological Approach Descriptive Criticism and Analytical Criticism are followed.

**Keywords:** Vainava religious, Vyasar, Villi Baratha, Culture

## முன்னுரை

'பாரதம்' என்னும் சொல்லிற்குப் பரதனின் வம்சம் பற்றிய நூல் என்பது பொருளாகும். மகாபாரதத்தில் கூறப்படும் 'பரதன்' என்பவன் சத்திரிய குலத்தில் தோன்றிய துஷ்யந்தன் என்ற பேரரசனுக்கும் சகுந்தலைக்கும் மகனாகப் பிறந்து புகழ்பெற்ற பேரரசன் ஆவான். இவனது வழித் தோன்றல்களே 'பாரதர். எனவே இவர்களது வரலாற்றைக் கூறும் நூல் 'பாரதம்' என்றாயிற்று. வருணாச்சிரம தருமம், அரச தருமம், மோட்ச தருமம், நீதிநெறிகள் போன்ற கருத்துச் செறிவு மிக்க பாரமான செய்திகள் இந்நூலில் இருபத்தால் இதைப் 'பாரதம்' எனலாம். இந்து தர்மத்தில் மிக உயரியனவாகக் கருதப்படும் பகவத்கீதையும் விஷ்ணு சகஸ்ரநாமமும் இந்நூலில் இருப்பதால் இந்நூலினை 'மகாபாரதம்' என்றனர். இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் வைணவ சமயப் பரப்பலுக்கு வியாச, வில்லிபாரதங்களின் பங்களிப்பு இக்கட்டுரையில் ஆராய்ந்து வெளிப்படுத்தப்படுகின்றன.

## வேதவியாசரும் மகாபாரதமும்

மானுட ஒழுக்கங்களைப் பல்வேறு கதைகள் வாயிலாக விளக்கும் வேதவியாசரின் 'ஸ்ரீமகாபாரதம்' ஒரு பண்பாட்டுக் களஞ்சியமாகும். வேதங்களின் சாரங்கள் இந்நூலில் நிறைந்து

காணப்படுவதால் இதனை 'ஐந்தாம் வேதம்' எனச் சான்றோர் போற்றுகின்றனர். பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்ட இந்நூலில் தருமவிவாதங்களே நிறைந்துள்ளன. இந்நூலாசிரியரான வேதவியாசர் ஒழுக்கங்களைப் போதிக்கவும், கதாபாத்திரங்களை வழிப்படுத்தவும் தாமே ஒரு கதாபாத்திரமாக வருகின்றார். புலன்களை அடக்கிப் பற்றில்லாமல் தருமங்களைச் செய்யவேண்டும்; தருமமும் உயிரும் நிலையானது; உடல் நிலையற்றது; உயிருக்குச் சிறப்புச் சேர்க்கும் தருமத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்னும் சிந்தனைகளை வலியுறுத்தும் வியாசபாரதம் பக்தி, இலக்கிய உலகில் மிகச்சிறந்த இதிகாசக் காப்பியமாகும்.

## வியாசபாரதத்தின் முக்கியத்துவம்

வியாசபாரதத்தில் விஜயனாகிய அர்ச்சுனனே கதைத் தலைவன் ஆவான். ஆயினும் முக்கிய மாந்தனான 'யுதிஷ்டிரர்' என்ற தருமனே தருமத்தின் உறைவிடமாகவும், தருமத்தின் தலைவனாகவும் வருகின்றான். கொதித்து எழும் சூழல்களில் கூடத்தருமன் பொறுமையாகவும் நிதானமாகவும் செயல் படுகின்றான். மனிதர்களுக்கு ஆன்பபலத்தைப் போதிக்கும் பாத்திரமாகத் தருமனைப் படைத்துள்ள வியாசர் அவனைச் சத்தியம், தருமம், தியாகம், மனோவலிமை, சகோதரபாசம் ஆகிய பண்புகள் கொண்டவனாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

வியாசபாரதத்தில் பாரதப்போரே மையநிகழ்ச்சியாகும். பதினெட்டு நாட்கள் நடைபெற்ற அப்போரின் சிக்கல்களை வியாசர் சுமார் இருபதாயிரம் சுலோகங்களில் வருணனை செய்துள்ளார். அப்போரில் கண்ணன் தானே நேரில் போரிடாது, அர்ச்சுனனுக்குச் சாரதியாக இருந்து 'பார்த்தசாரதி' (தேர்ப்பாகன்) என்ற பெயரில் பாண்டவர்களுக்குத் துணை நிற்கின்றான். கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு மைத்துனன், நண்பன், ஆசாரியனாக இருந்து பாரதப் போரை வழி நடத்துகின்றான். கௌரவர் அழிவும் பாண்டவர் வெற்றியும் தன் கையில் என்ற நிலையில் கண்ணபிரான் பாரதப் போரினை நடத்துவதோடு போரற்ற காலங்களில் பாண்டவர்களின் பாதுகாவலாகவும் செயல்படுகின்றான்.

அறவழியில் இயங்குவதற்குச் சிந்திக்கத் தூண்டும் வியாசபாரதம், மனிதர்கள் தருமத்தி நிந்திக்கக் கூடாது; பலன்களை எதிர்பார்க்காமல் கடமைகளைச் செய்யவேண்டும் என வலியுறுத்துகின்றது. வியாசபாரதத்தைப் படிப்போர் பகைமை, பொறாமை, சினம் போன்ற தீக்குணங்களை மனத்தை விட்டு நீக்கி, தியாகம், அமைதி, அன்பு ஆகிய நற்குணங்களை வளர்த்து அமைதி காண்பர். பாரத மண்ணுக்கும் மக்களுக்கும் 'பதினெட்டு' என்ற எண்ணிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப்போலத் தமிழ்நாட்டிலும் தாக்கம் உண்டு. பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் மேல்க்கணக்கு என நூல்களும், பதினெண் சித்தர்களும், இந்தியக் கோயில்களின் படிக்கட்டுக்கள் பதினெட்டு எனவும் 'பதினெட்டு' என்ற எண் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆடிமாதம் பதினெட்டாம் நாளை உழவர்கள் விதைப்பிற்குச் சிறந்த நாளாகக் கருதி அதனை 'ஆடிப்பெருக்கு' விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

கலம்பக இலக்கியத்தின் உறுப்புக்கள் பதினெட்டு, வியாசபாரதத்தின் பருவங்கள் பதினெட்டு, பகவத்கீதையின் அத்தியாயங்கள் பதினெட்டு, இராம - இராவணப்போர் நடைபெற்ற மாதங்கள் பதினெட்டு, தேவ அசுரப்போர் நடைபெற்ற வருடங்கள் பதினெட்டு, பாரதப்போரில் கலந்து கொண்ட படைகள் மற்றும் படைப் பெருக்கத்தின் எண்ணிக்கை பதினெட்டு அக்குரோணிகள், வியாச பாரதத்தின் பீஷ்மர் எடுத்துரைக்கும் தருமங்களின் வகைகள் பதினெட்டு, மன்னன் பயன்படுத்தும் ராஜசின்னங்கள் 'பதினெட்டு' , மன்னன் குற்றவாளிகுளுக்கு வழங்கும் தண்டனைகள் 'பதினெட்டு (வியாசபாரதம்) எனத் தமிழ்ப் பண்பாட்டின் அனைத்து நிலைகளிலும் பதினெட்டு என்ற எண் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## தமிழ்நாட்டில் பாரதத்தின் தாக்கம்

வியாசபாரதத்தின் காலத்திலேயே தமிழ்நாட்டில் அதன் தாக்கம் இருந்துள்ளதைப் புறநானூறு, பதிற்றுப்பத்து, கலித் தொகை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை ஆகிய சங்க நூல்களில் பாரதக்கதைகள் உவமைகளாகவும் சிறு நிகழ்ச்சிகளாகவும் கூறப்பெற்றிருப்பதிலிருந்து அறியலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகிய தமிழ்க் காப்பியங்களிலும், நாயன்மார்களின் பன்னிரு திருமுறைகளிலும், ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் போன்ற பக்திப் பனுவல்களிலும் பாரதக் கதைகள் ஆளப்பட்டிருப்பதைக் கொண்டு அறியலாம்.

## பகவத்கீதையும் வியாசபாரதமும்

வியாசபாரதத்தில் பீஷ்மபருவத்தில் 'பகவத் கீதை' இடம்பெற்றுள்ளது. குருஷேத்திரத்தில் பாரதப்போர் தொடங்கியபோது காண்டீபம் தாங்கிய அர்ச்சுனன் தன் உறவினர்களை எதிர்த்துப் போரிடத் துணிவு இல்லாமல் மனக்கலக்கம் கொள்கின்றான். அப்போது அவனுக்குச் சாரதியாக வந்த கண்ணன் அவனது மனக்கலக்கத்தைப் போக்கத் தருமங்களை உபதேசம் செய்வதே 'பகவத்கீதை' யாகும். இதனால் அர்ச்சுனன் மனத்தெளிவு பெறுகின்றார். பகவத்கீதை இந்து சமயத்தின் சமரச மனோபாவத்தை உணர்த்துகின்றது. கீதையின் தொடர்ச்சியாகவும் சாரமாகவும் வியாசரின் அஸ்வமேதிக பருவத்தில் 'அனுகீதா' பருவம் இடம்பெற்றுள்ளது. சாந்தி பருவத்தில் மோட்ச தர்மத்தில் 'பராசர கீதை' என்னும் பகுதியும் உள்ளது.

## வில்லிப்புத்தூராழ்வாரின் வில்லிபாரதம்

இராமாயணமும் மகாபாரதமும் இந்தியாவின் இதிகாச இலக்கியங்களாகும். 'ஸ்ரீவசன பூஷணம்' என்ற நூல் வேதங்களின் பொருள் களை அறுதியிட்டுக் கூறுகின்றது. மனு போன்றவர்கள் அருளிச்செய்த தர்ம சாத்திரங் களாகிய ஸ்மிருதிகள், ஸ்ரீமத் இராமாயணம், ஸ்ரீ மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் ஆகியன பதினெண் புராணங்கள் எனக் கூறப்படுகின்றன. ஸ்ரீமத் இராமாயணம் இராவணனின் அசோகவனத்தில் சிறை யிருந்த சீதையின் ஏற்றத்தைக் கூறுகின்றது. இவ்வாறே பாண்டவர்களுக்காத் தூது சென்ற கண்ணபிரானின் ஏற்றத்தை மகாபாரதம் சிறப்பித்துப் பேசுகின்றது. வியாசர் தம மகாபாரதத்தை 'நாராயணன் கதை' என்றார். திருமங்கையாழ்வாரும் கண்ண பிரானை 'குடை மன்னரிடை நடந்த தூதர்' , 'இன்னார் தூதன் என நின்றான்' என்று கண்ணன் தூதினைப் பாடியுள்ளார். பாரதப்போர் 'பகவத்கீதை' யின் தோற்றத்திற்கு நிலைக்களனாகும்.[1] இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட பாரதத்தை வில்லிபுத்தூராழ்வார்,

"நீடாழி உலகத்து மறைநாலொடு
ஐந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்ன நாள்"

எனத் தம் கடவுள் வாழ்த்துப் பாடலில் மகாபாரதத்தை 'ஐந்தாம் மறை' எனக் குறிப்பிட்டள்ளார். 'மகாபாரதம்' என்பது இந்நூலின் சிறப்பினைக் குறிக்கும். உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு பற்றிக் கூறும் மகாபாரதம் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பல செயல்களை ஒன்பான் இலக்கியச் சுவையோடு கூறுவதோடு பெருங் காப்பிய இலக்கணங்களையும் கொண்டுள்ளது.

## வில்லிபுத்தூராழ்வார்

'திருப்புகழ்' பாடிய அருணகிரிநாதர் காலத்தில் வாழ்ந்த வில்லிபுத்தூராழ்வார், பாரத வெண்பாவைப் பெருந்தேவனாருக்குப் பிற்பட்ட காலத்தவர் ஆவார். இவர் தென்னாற் காடு மாவட்டத்திலுள்ள திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் பிறந்தவர். வைணவ அந்தணர் மரபில் பிறந்த இவருடைய தந்தையின் பெயர் வீரராகவன் என்பதாகும். வில்லிபுத்தூராழ்வார் திருமாலிடம் பெரும் பக்தி கொண்டவராயினும் தம் வில்லிபாரதத்தில் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சருக்கம், அர்ச்சுனன் தவநிலைச் சருக்கம் ஆகிய சருக்கங்களில் சிவபெருமானைப் பலவாறு போற்றிப் பாடியுள்ளார். சூரியன்,

வாயு, காளி ஆகிய கடவுளர்களையும் போற்றிப் பாடியிருப்பதால் வில்லிபுத்தூராழ்வாரை மதக்காழ்ப்புணர்வு இல்லாத வைணவராகக் கொள்ளலாம்.

## வில்லிபாரதம்

வியாசபாரதத்தின் முதல் பத்து பருவங்களையே வில்லிபுத்தூராழ்வாரின் ‘வில்லிபாரதம்’ என்ற நூல் கொண்டிருக்கின்றது. வில்லிபாரதத்தில் வடசொற் கலப்பு மிகுதி. ஆயினும் கற்பனை வளம், உவமை நயம், உருவகங்கள், சந்தங்கள் ஆகியன நிறைந்த நூலாகும். வில்லிபாரதத்திற்கு வில்லியின் மகனாகிய வரந்தருவார் இருபத்து மூன்று பாடல்களைக் கொண்ட சிறப்புப் பாயிரத்தைப் பாடியுள்ளார். வில்லிபாரதத்தில் 4351 பாடல்களும், 49 சருக்கங்களும் உள்ளன. ‘பருவம்’ என்பது பெரும் பிரிவு. ‘சருக்கம்’ என்பது சிறுபிரிவாகும். வியாசபாரதத்தில் கர்ம, யோக, ஞான மார்க்கச் சிந்தனைகள், இல்லற நெறிகள், சகோதர பாசம், தாயாதி பகை, அரசியல் நுட்பங்கள், அரசப் பண்புகள், குடியோம்பல், அறவாழ்வு, வீடுபேற்று நெறிகள் ஆகியன சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளன.

வில்லிபாரதத்தில் அர்ச்சுனனே கதைத் தலைவன் ஆவான். பாண்டவர்களில் மூன்றாவதாகப் பிறந்த இவனுக்குத் தனஞ்சயன், பாண்டவன், கரிதுவஜன், குடாகேசன், பார்த்தன், அனகன், பரந்தபன், பாரதன், கிரீடி, குருநந்தன், பற்குணன் என்னும் பலபெயர்களை வில்லி குறிப்பிட்டுள்ளார். தருமனின் இராஜசூய யாகத்திற்கு வடநாட்டு மன்னர்களை வென்று பெரும் பொருள் கொண்டு வந்தமையால் அருச்சுனனுக்குத் ‘தனஞ்சயன்’ என்னும் பெயர் வந்தது. துரோணரிடம் படைப்பயிற்சி பயின்ற அருச்சுனன் காண்டவ வனத்தை அழித்து அக்கினிதேவனுக்கு உணவளித்தவன். சிவனிடம் கடுந்தவம் செய்து ‘பாசுபதாஸ்திரம்’ பெற்றவன்.

கௌரவர்கள் மண்ணாசை காரணமாக பாண்டவர் உரிமைகளை இழக்கச் செய்ததால் பாரதப்போர் மூண்டது. பதினெட்டு நாட்கள் நடைபெற்ற இப்போரில் கிருஷ்ணபகவானின் படைகள் அனைத்தும் கௌரவர்கள் பக்கம்; கண்ணன் மட்டுமே பாண்டவர்கள் பக்கம். அப்போரில் கௌரவர்கள் அழிந்தனர்.

## வியாசபாரதமும் வில்லிபாரதமும்

நால்வருணப் பிரிவுகள் மேலோங்கியிருந்த வியாச பாரதத்தில் வேதங்களிலும் ஆகமங்களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த பிராமணர்களே சமூகத்தில் முதன்மை பெற்றிருந்தனர். ராஜதந்திரம், போர்முறைகளில் வல்லுநர்களாக விளங்கிய பிராமணர்களே அரச குடும்பங்களை நன்னெறிப் படுத்தினர். வியாசர் வைசியர், சூத்திரர்களைப் பற்றி அதிகமாகப் பேசவில்லை.

அறத்தின் மாட்சியையும் மறத்தின் வீழ்ச்சியையும் எக்கால மனிதர்களுக்கும் வாழ்வியல் நெறிகளாக அறிவுறுத்துவதே வியாசபாரதமாகும். பாரதக்கதைகள், “பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிரஞ்சீவித் தன்மையோடு வாழ்ந்து வரும் பாரதக் கதைகள் பங்காளிகளுக்குள் பகைமை கூடாது. வஞ்சனையாகப் பிறர் உரிமைகளைப் பறித்தல் கூடாது. பெண்குலத்தை அவமதித்தல் கூடாது. ஆண்மையினையும் ஆற்றலினையும் ஆக்கத்திற்கே பயன்படுத்த வேண்டும் என்பது முதலான பண்புகளை விளக்கும் நிகழ்ச்சிகளைக் கொண்டு மக்கள் உள்ளங்களைப் பண்படுத்தக்கூடிய ஆழமான கருத்துரைகளைக் கொண்டுள்ளன” என்பர்.

வில்லிபுத்தூராழ்வார் வடமொழியில் வியாசர் இயற்றிய பாரதக் கதையைச் சுருக்கமாகத் தமிழில் கூற, வியாசபாரதத்தின் வழிநூலாகவே வில்லிபாரதத்தைப் படைத் துள்ளார். இதனைக் காந்தியடிகள், “பாரதக் காப்பியத்தின் மாந்தர்கள், பாத்திரங்கள் வியாசமுனிவரின் கற்பனையில் பிறந்தவர்கள்” என்று கூறியதிலிருந்து அறியலாம். வில்லியே தனது பாரதம் வியாசபாரதத்தின் வழிநூல் என ஒப்புக் கொண்டுள்ளார். வடமொழியில் தோன்றிய முதல்காப்பியம் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணமே. இராமா யணமும் மகாபாரதமும் வைணவக் கடவுளான திருமாலைத் தலைவனாகக் கொண்டவை. திருமாலின் அவதாரங்களில் இராமாவதாரத்தைப் பேசுவது இராமாயணம்.

கிருஷ்ணாவதாரத்தைப் பேசுவது மகாபாரதம். மகாபாரதத்தை இயற்றிய வியாசர் நான்கு வேதங்களைத் தொகுத்து வழங்கியவர் ஆதலால் 'வேதவியாசர்' எனப்பட்டார். பாரதியார் பாண்டவர்களுக்கும் கௌரவர் களுக்கும் நடந்த பாரதப்போர் வரலாற்று உண்மை என்பதை பாஞ்சாலி சபதத்திற்கு எழுதிய குறிப்புக்களில்,

"பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால் மற்ற குலத்தவரும் நெறிதவறியிருக்க மாட்டார்கள். மஹாபாரதப் போர் நடந்திராது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா... மஹா பாரதப்போர் நடக்கும் முன்பாகவே முதற்படப் பாவம் பிராமணர்களுக்குள் புகுந்தது" எனக் கூறுவதிலிருந்து பாரத ஜாதியின் அழிவிற்குப் பிராமணர்களே பொறுப்பாளிகள் என அறியலாம்.

வியாசர், வால்மீகிக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டவர். இராமாயண நிகழ்ச்சி கள் வியாசபாரதத்தில் பல இடங்களில் ஆளப்பெற்றுள்ளன. சங்கப் பாடல்களில் பாரதக் கதைக் குறிப்புக்களே மிகுதி; இராமன் தமிழ்க் கடவுளாகக் கூறப்படவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் சமணத்தை விடுத்துச் சைவத்திற்கு வந்ததும் அவனும் அவன் வழி வந்தோரும் வடமொழியையும் அம்மொழியிலுள்ள மகாபாரதம் போன்ற இலக்கியங்களையும் தமிழகத்தில் பரப்புவதில் ஆர்வம் காட்டினர். "பாரதக் காப்பிய நாயக, நாயகியரைத் தெய்வமாக ஏற்று வழிபடும் வழக்கத்தையும் தோற்றுவித்தனர். இதற்கு வைணவர்களும் காரணமாவர். ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல ஊர்களில் பாரதக்கதை சொல்வதற்காகப் பல்லவர்கள் நிலங்களை 'நிவந்தம்' விட்ட செய்திகள் கல்வெட்டுக்களில் கிடைக்கின்றன என்பர்.

கண்ணகியைக் கற்புக் கடவுளாக வழிபட்ட தமிழ் மக்கள் பாஞ்சாலி பெயரால் கோவில்களை அமைத்து தீமிதிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி வழிபட்டனர். கண்ணகி கோயில்களில் சில பாஞ்சாலி கோயில்களாயின. பாஞ்சாலத்தில் கூட பாஞ்சாலிக்குக் கோயில்களும் வழிபாடுகளும் இல்லை. தமிழகத்தில் ஏற்பட்ட இந்நிலையினை கே.கே.பிள்ளை, "பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதைப் போல அன்னிய பழக்க வழக்கங்களும் பண்பாடும் சமயக் கருத்துக்களும் தமிழ் மரபிற்கேற்ப உருமரித் தமிழரின் சமூகத்தில் அனைத்துத் துறைகளிலும் ஆட்சிபெற்றன எனக் கூறியுள்ளார்.

பல்லவர் ஆட்சியில் வியாசபாரதத்திற்கு ஏற்பட்ட செல்வாக்குக் காரணமாகவும் தமிழ்நாட்டில் வைணவம் வளர்ந்தது. இதனால் வடமொழியின் மூலமே தமிழ் நாட்டில் வைணவம் செல்வாக்குப் பெற்றது. வடமொழியைப் பல்லவர்கள் ஐந்து நூற்றாண்டுக்காலம் ஆட்சிமொழியாகக் கொண்டிருந்தனர். வியாசபாரதத்தில் போர்த் தருமங்களைத் தருமனும் கண்ணனும் மீறுகின்றனர். போர்க்களத்தில் துரோணரை 'அசுவத்தாமன் இறந்து விட்டான்' என்ற பொய்ச் செய்தியைத் தருமன் மனமறிந்தே கூறுகின்றான். கர்ணன் நிராயுதபாணியாக நிற்கும்போது அவனைக்கொள்ள அர்ச்சுனனைக் கண்ணன் தூண்டுகின்றான். இதனைப் பாரதப் போரில் 'வரம் கடந்த செயல்' என்பார் இராஜாஜி. தமிழரல்லாதார் ஆட்சி (பல்லவர்) வைணவ ஆழ்வார்கள், புராணச் சொற்பொழிவாளர்கள் எனத் தமிழ்நாட்டில் பட்டி தொட்டிகளிலெல்லாம் வியாசபாரதம் பரவிய சூழலில்தான், வில்லிபுத்தூராழ்வார் வியாசபாரதத்தைத் தமிழில் இயற்றினார்.

வைதீக வைணவரான வில்லிபுத்தூ ராழ்வார் தம் பாரதத்தில் 'எங்கள் மாதவன்' , 'வினையகற்றும் கந்துளவோன்' எனத் திருமாலைப் பாடி, தனக்கு முன்னர்த் தோன்றிய நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரையும் பல இடங்களில் போற்றியுள்ளார்.

வில்லிபுத்தூராழ்வார் தம் பாரதத்தில் சிவனையும், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய வைச ஆசாரியர்களையும், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய சிவத் தலங்களையும் பெருமைப்படுத்திப் பாடியுள்ளார்.

## முடிவுரை

இவ்வாறு வரலாற்று நோக்கிலும், சமய இலக்கிய வரலாற்றுப் பார்வையிலும், தமிழ்நாட்டில் வைணவப் பக்திப் பரப்பல் நோக்கிலும் வியாச, வில்லி பாரதங்களின் பங்களிப்பு இந்த ஆய்வுக் கட்டுரையில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன.

## References

Kazim, K., (2000) Political thinking in Mahabharatham, Thiruvarasu book store, Chennai, India

Rajaram Durai, Rama Subramaniyam, V.T., (2006) villiputhuralwarin Villi bharatham moolamum thelivuraiyum, Part-3, Poombukar Pathippagam, Chennai, India

Rama Subramaniyam, V.T., (2006) villiputhur Villi bharatham moolamum thelivuraiyum, Part-4, Poombukar Pathippagam, Chennai, India

Rama Subramaniyam, V.T., Narayana Velupillai, M., (2001) villiputhur Villi bharatham moolamum thelivuraiyum, Part-4, Poombukar Pathippagam, Chennai, India

Sivagnanam, M.P., (2010) Political thinking in Villibharatham, Poongodi pathippagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License